★★★ தினத்தந்தி திருச்சி 5-5-2008 9

# ஆயூர்வேத மருத்துவ பயிற்சி முகாம்

விராலிமலை, மே.5-

மேட் தாய் நிறுவனமும், மத்திய சுகாதார அமைச்சகமும் இணைந்து விராலிமலை ஒன்றியம், ராஜாளிபட்டியில் அயூர்வேத பாரம்பரிய மருத்துவர்களுக்கான 2 நாள் பயிற்சி முகாம் நடத்தின. மேட் நிறுவன இயக்குனர் சிரில் அலெக்சாண்டர் தலைமை வகித்தார். வெஸ்வா நிறுவன இயக்குனர் ராஜேஷ்கண்ணா முன்னிலை வகித்தார். ஒருங்கிணைப்பாளர் கிளமெண்ட் வரவேற்றார்.

திண்டுக்கல் காந்தி கிராம லெட்சுமி சேவா சங்கத்தின் மருத்துவர்கள் மாரியப்பன், சுந்தரமீனாள் ஆகியோர் ஆயுர் வேத மருந்துகளின் பயனையும், தயாரிப்பு முறை விளக்கங்களை பற்றியும் எடுத்து கூறி பயிற்சி அளித்தனர். இதில் 50-க்கும் மேற்பட்ட ஆயுர் வேத மருத்துவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஜீனியாமேரி நன்றி கூறினார். முகாம் ஏற்பாடுகளை கிளமண்ட் ஸ்தனீஸ்லாஸ் செய்திருந்தனர்.